# தலாக்கினை குறைப்பதற்கான முன்மொழியுதலும்,கலந்துரையாடலும்: (சம்மாந்துறைப் பிரதேசத்தை மையப்படுத்திய ஓர் விசேட ஆய்வு)

**M.A.F Sifna Banu**

121, sinnappalli lane, sammanthurai, srilanka.

fathimazifnabanu@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இறைவனின் பார்வையில் மிகவும் வெறுக்கத்தக்க விடயம் தலாக் என்பது நாம் அறிந்ததே.சிறப்பான வாழ்க்கைக்காக திருமணம் பெரும் கலாசார நிகழ்வாக மேற்கொள்ளப்படுகின்ற போதும் அவை இடை நடுவே விரிசல் ஏற்பட்டு பிணக்கு ஏற்பட்டு தலாக்கில் சென்று முடிவடைவதினை ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாகும். தலாக் குறித்து ஆய்வு உலகில் பல வகையான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் தனது ஆய்வுப் பிரதேசமான சம்மாந்துறையில் இவ் ஆய்வுகள் பெரியளவில் மேற்கொள்ளப்படவில்லை. எனவே இவ்வாய்வு இடைவெளியினை நிறைவேற்றுவதாயே இவ்வாய்வு அமைகின்றது.தலாக்கிற்கான காரணங்களைக் கண்டறிந்து தலாக் ஏற்படும் விகிதத்தைக் குறைப்பதற்கான முன்மொழிவுகளை வழங்குவதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். பனிப்பந்து மாதிரி எடுப்பு உபாயம் மூலம் 50 மாதிரிகளிடம் நேர்கானல்,வினாக்கொத்து என்பன மூலமும் 2 இலக்குக் குழுக்கலந்துரையாடல் மூலமும் முதலாம் நிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டன. மேலும் நுல்கள்,சஞ்சிகை,இனையத்தள கட்டுரைகள்,வெளியீடுகள் மூலமும் சேகரிக்கப்பட்டன.இவ்வாய்வின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட பிரதான விடயம் என்னவெனில் ஆய்வுப் பிரதேசத்தில் நாளுக்கு நாள் பல்வேறு காரணங்களுக்காக தலாக் இடம்பெறுவது அதிகரித்து வருகின்றுத என்பதாகும்.இதற்கான சட்டங்களை மீள் திருத்தல், திருமணத்திற்கு முன்பு உளவளத்துணை வழங்கல், சிறந்த குடும்ப வாழ்வு தொடர்பாக விழிப்புணர்வு வழங்கல் பலதாரமணம் செய்தல் எனும் பரிந்துரைகளும் இறுதியில் வைக்கப்பட்டன.

**திறவுச் சொற்கள்:** தலாக், பலதாரமணம், உளப்பிணைப்பு

## அறிமுகம்

ஒருவரையொருவர் புரிந்து கொண்டு ஏற்றுக்கொண்டு ஆண், பெண் மற்றும் அவர்களது பிள்ளைகளில் உளப் பிணைப்பே (Psychological Bond) குடும்பம் என்பதாக உளவியலாளர்கள் வரைவிலக்கணப்படுத்துகின்றனர். (ரவூப் ஸைன்.2014). எனவே இத்தகைய குடும்பத்தினூடாகப் பாரிய நோக்கங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பது தெளிவாகின்றது. சில எதிர்பார்ப்புகள் நிறைவேறாது மனோ நிலைகள் பாதிக்கப்படுமிடத்துச் சரியான புரிதல்கள் இல்லாமல் வாழ்க்கை பிரியக் கூடிய நிலை ஏற்படும். இன்னும் பெண்களைப் பொருத்தவரையில் அவர்களின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறாதவிடத்து உடனடியாக உணர்ச்சிவசப்படக் கூடிய நிலைக்குத் தள்ளப்படுவாள். இந்நிலையில் கணவன் அவற்றை அனுசரிக்காது தனது உணர்வுகளை அவளின் மீது திணிக்கும்போது, விளைவு பிழையாகத் தான் வெளிவரும். திருமணம் என்பது வெறும் உடலியல் தேவைகள் நிறைவேற்றப்படுவதற்காக மேற்கொள்ளப்படும் ஒரு ஒப்பந்தம் அன்று. மாறாக வாழ்வின் பல தேவைகளை அது நிவர்த்தி செய்கின்றது. இருந்த போதிலும் சில காரணிகளால் திருமணம் முறிந்து விடுவதானது திருமணத்தின் நோக்கத்தை அடியோடு அழித்து விடுகிறது என்றால் அது மிகையில்லை.

இஸ்லாம் குடும்பம் என்ற அமைப்பைப் புனித அமைப்பாகக் கருதி அதனை ஒழுங்குபடுத்த நுணுக்கமான பல சட்டங்களை வகுத்துள்ளது. இலங்கையைப் பொறுத்தவரையில் குடும்ப உறவுகள் பல்வேறு சட்டங்களால் ஆளப்படுகின்றன. அந்த வகையில் முஸ்லிம் தனியார் சட்டத்தின் கீழ் வரும் விடயங்களில் மிகவும் பிரதானமானதே தலாக் ஆகும்.

**ஆய்வுப் பிரச்சினை**

கணவன் வெளிநாடு செல்வதால் மனைவி வேறு நபருடன் தொடர்பு கொள்ளல், உறவினர்கள் சிறிய பிரச்சினைகளைப் பெரிதாக்கிக் காட்டல், மேலதிக ஆடம்பர ஆசைகள், கலாசாரப் பிறழ்வுகள், இளம் பிள்ளைகள் கல்வி கற்கும் அல்லது வேலை செய்யும் இடங்களில் காதல் வயப்படல், இளவயதுத் திருமணம், பொழுது போக்குகளில் மூழ்கித் தனது கடமைகளைச் சரியாகச் செய்யாதிருத்தல், ஒரு ஆணை அல்லது பெண்ணை அறிந்து கொள்ளாமல் பெற்றோர் திருமணம் செய்து கொடுத்துக் குடும்பத்தில் சரியான தலைமைத்துவம் இன்மை போன்ற காரணங்களால் சம்மாந்துறையில் தலாக் இடம் பெறுகிறது.(Ibrahim.2015). அவ்வாறு இடம்பெற்றால் அதன் தாக்கம் கணவன், மனைவி இருவருடத்தில் மாத்திரம் சுருங்காது.மாறாக அவர்களின்குழந்தைகளும் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு தனிநபரும் சமூகத்தின் ஒவ்வொரு பகுதி என்பதால் மணவிலக்குகளின் விளைவாகத் தனிநபருக்கு ஏற்படும் தாக்கங்கள் இவ்வாறான சமூகவியல் தாக்கங்களை ஏற்படுத்தும் என்றால் மிகையில்லை. அந்த வகையில் நோக்கினால் சங்கிலித் தொடரில் இவ்வாறான மணவிலக்குகளின் மூலம் பல வர்க்கத்தினர் பாதிக்கப்படுகின்றனர். மன நிம்மதிக்காகச் செய்ய நினைக்கும் மணவிலக்கு இறுதியில் சாபக்கேடாகவே அமையும் என்பதில் சந்தேகமில்லை. இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய தேவை தற்போது சமூகத்தில் அதிகம் உணரப்படுகின்றது

**ஆய்வு நோக்கம்**

சிறு பிரச்சினைகளை அடிப்படையாகத் தொட்டு உருவாகும் தலாக்கானது தற்போது பல்வேறு சமூக சீரழிவுகளை ஏற்படுத்துவதுடன் இதனால் எதிர்காலச் சந்ததியினர் கணிசமான முறையில் பாதிக்கப்படுவதனை அவதானிக்க முடிகின்றது. இதனைக் குறைப்பதற்கான மாற்று வழிகளை முன்வைப்பதினூடாகவும் அவற்றை நடைமுறைப்படுத்துவதனூடாகவும் சமூகத்தில் தலாக் நடைபெறும் விகிதாசாரத்தைக் குறைத்துச் சிறந்த குடும்ப மற்றும் சமூக முன்னேற்றத்திற்கு உதவுவதே இந்த ஆய்வின் மிகப் பெரும் எதிர்பார்ப்பாகும். அந்த வகையில் என்னுடைய ஆய்வின் நோக்கமாக அமைவது அழகிய குடும்ப வழிகாட்டல்களை வழங்கி, அதன்மூலம் தலாக் வீதத்தைக் குறைத்தலும், அதனூடாக ஊரில் இவ்வாறான பிரச்சினைகளுடன், மன உளைச்சலையும் எதிர்கொணடு வாழும் சம்பந்தப்பட்டவர்களின் உள்ளத்திற்கு ஆறுதல் வழங்கி, அதனூடாக ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்கி, வெற்றிப் பாதையை நோக்கி அதாவது இஸ்லாமிய அடிப்படைகளுடன் கூடிய ஓர் ஊராக எமது ஊரை மாற்றுவதுமே ஆகும்.

**ஆய்வு முறைமை**

ஆய்வு நோக்கத்தினை அடைந்து கொள்ளும் பொருட்டு பண்பு ரீதியான ஆய்வு முறை (Qualitative research meathod) பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ் ஆய்வானது ஒரு சமூக விஞ்ஞான ஆய்வு என்ற அடிப்படையில் கள ஆய்வு மாதிரியினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்வு முதலாம் நிலைத் தரவுகளை பிலதான மூலகமாகவும் ஏனைய தரவுகள் இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் கொண்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இங்கு நோக்க மாதிரி எடுப்பு உபயோகம்

பயன்படுத்தப்பட்டுள்ளது. நேர்காணல், இலக்குக்குழு கலந்துரையாடல், அவதானம் என்பன மூலம் நிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

ஆய்வுப் பிரதேசத்தின் 480 குடும்பங்களில் 10% இனை நேர்காணலுக்காக தெரிவு செய்ததில் கட்டமைக்கப்படாத வினாகத் தொகுதியினை உள்ளடங்கிய 48 நேர்காணலில் பின்வருவோர் இடம் பெற்றனர்.

இரண்டாம் நிலை தரவுகளாக பிரதேச செயளாளர் அறிக்கை, பண்பாட்டுத் தொடர்பான சஞ்சிகைகள், பத்திரிகைகள், நூல்கள், இலத்திரினியல் வெளியீடுகள், இலக்கியக் கட்டுரைகள், புலமையாளர்களின் ஆக்கங்கள்(scholar Artical) மூலம் சேகரிக்கப்பட்டு ms -word மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

**ஆய்வுப் பிரதேசம்**

மட்டக்களப்புத் தரவை என ஆரம்பத்திலும் 1700இற்குப் பிறகு சம்மாந்துறை எனவும் பிரபல்யமடைந்த, முழு இலங்கைத் தீவிலும் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பழம் பெரும் பிரதேசம் எமது ஊர் சம்மாந்துறையாகும். மட்டக்களப்புத் தரவை எனும் பெயர் வரக் காரணம் ஜெய்லானியிலிருந்து கடல் மார்க்கமாகக் கப்பலொன்று வந்தடைந்தபோது அவர்களுக்கு மட்டக்களப்புத் தரவை காசிம் என்பவர் குடிக்கக் கொடுத்ததால் இப்பெயர் வந்ததாக ‘‘சாஹுல் ஹமீது ஒலியுல்லாஹ் கல்முனை வந்த கதை’’ என்ற பாடல் எடுத்தியம்புகின்றது. இன்னும் தென்னிந்திய வர்த்தகர்கள் தங்களுடைய ‘‘சம்பன்’’ என்ற வள்ளங்களை இங்கு வந்து நங்கூரமிட்டதன் காரணமாகக் காலப் போக்கில் சம்மாந்துறை எனப் பெயர் பெற்றதாயும், வயல் நிலங்கள் சூழப்பெற்ற ஓரிடம் என்பதால், இங்கிருந்து வெளிநாடுகளுக்குச் சம்பா நெல் ஏற்றுமதி செய்யப்பட்ட காரணத்தினால் சம்பாதுறை என அழைக்கப்பட்ட எமது ஊர் ‘‘சம்மாந்துறை’’ என காலப்போக்கில் அழைக்கப்பட்டது. இன்னும் பொலன்னறுவை மன்னன் இரண்டாம் விக்ரமபாகு ஆட்சிக் காலத்தில் இங்கு வந்த முகையதீன் ஆண்டவர் தனது வாய் பேச முடியாத மகன் இரண்டாம் விஜயபாகுவிற்கு இவ்வூரில் உள்ளோர் வைத்தியம் செய்தமையால் அவரின் பெயரில் ‘‘முகையதீன் பள்ளி’’ என்ற சம்மாந்துறையில் முதல் பள்ளி வாயலை நிறுவியதாகவும் வரலாறு கூறுகின்றது. ஆக, பரப்பிலும், அடிப்படைப் பொருளாதார வளத்திலும் கல்வியிலும் விவசாய அபிவிருத்தியிலும் போக்குவரத்திலும் மேம்பட்ட ஒரு சிறப்பான பிரதேசமாகத் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் சம்மாந்துறையின் கிழக்கில் வயல் வெளிகளும், மாவடிப்பள்ளிக் கிராமமும் மேற்குப் பகுதியில் வீரமுனைக் கிராமமும் வடக்கில் வண்ணார் வட்டை, சேவகப்பற்றுக் கண்டம், அல்லைக்குளம் என்பனவும் தெற்கில் கருவாட்டுக்கல் பகுதிகளையும் பரப்பெல்லையாகக் கொண்டுள்ளது. 1950ஆம் ஆண்டுக்கு முன் சனத்தொகையில் பெரும்பான்மையாக முஸ்லிம்கள் 88 தமிழ் மக்கள் 12 வாழ்ந்து வந்துள்ளனர். ஆனால், தற்போது முஸ்லிம்கள், தமிழர்கள் உட்பட பறங்கியரும், சிங்களவர்களும் குறிப்பிட்ட சதவீதத்தில் வாழ்கின்றனர். தற்போது சம்மாந்துறைப் பிரதேசத்தின் 51 பகுதிகளில் 35302 ஆண்களும், 35977 பெண்களும் மொத்தம் 71279 பேர் வாழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.இன்னும் சம்மாந்துறையில் வருமானம் ஈட்டக்கூடிய முக்கிய தொழிலாக ஆரம்ப காலத்தில் விவசாயம் காணப்பட்டது. கல்வி நடவடிக்கைகளை நோக்குகையில் ஆரம்பத்தில் 5 பாடசாலைகள் பிரசித்தி பெற்றுக் காணப்பட்ட போதிலும் தற்போது 64 பாடசாலைகள் காணப்படுவதுடன் அவற்றின் விளைவுகளாகத் திறமை மிக்க மாணவர்கள் உருவாகி ஊரில் பல சேவைகளையும் செய்கின்றனர். மேலும், மார்க்க விடயங்களைத் தொடர்ந்தும் சிறப்பாக மேற்கொள்ள 7 ஜும்ஆப் பள்ளிவாயல்கள் உட்படப் பல பள்ளிவாயல்கள் காணப்படுகின்றமை விஷேடமாகும். இன்னும் ஆரம்ப காலங்களில் ஆண்களும், பெண்களும் தமக்கேயுரிய சில விளையாட்டுக்களைப் பொழுதுபோக்கிற்காகக்

கோஷ்டியாகச் சேர்த்து விளையாடுவர்.தொடர்ந்தும் சம்மாந்துறையைப் பொறுத்தவரை கணக்கன் கத்தர் குடி, மாமனார் போடி குடி, தேன் முதலி குடி, வெள்ளரசன் குடி, சங்கிதி குடி, இராசம்புள்ள குடி, சுல்தான் குடி போன்ற 25 குடிகள் இருந்ததாக வரலாறு கூறுகின்றது. இவை ஒரு குடும்பத்தின் தலைமை தாங்கும் அமைப்பாக இருந்து வந்துள்ளதுடன், குடும்பப் பிரச்சினைகள் ஏற்படுமிடத்து இவர்களே தலைமை தாங்கி தீர்த்து வைப்பர். கலாசாரச் சிறப்புக்களின் அடிப்படையில் திருமணத்தை எடுத்து நோக்கினால் பெட்டி கொண்டு போதல், திட்டம் கட்டுதல், கேள்வி வட்டா, மருதோண்டி இடல், பந்த கால் நாட்டுதல், நாள் வட்டா போன்ற சம்பிரதாயங்களுடன் பல நாட்கள், மாதங்கள் இடம்பெறும். இன்னும் காரியங்கள் நிறைவேற, சுகவீனம் போன்ற காரியங்களுக்கு நேர்த்திக்கடன் வைப்பது, கபூர்ஸ்தானங்களுக்கு நேர்ந்து அனுப்புவது போன்ற மூடப்பழக்கவழக்கங்களைக் கொண்டும் இருந்தனர். ஆனால், தற்போது அவை குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.இன்னும் அக்காலத்திலிருந்தே பெருநாட்களைச் சிறப்பாக அனைவரும் சேர்ந்து கொண்டாடி இருப்பதுடன், பல வேலைகளைச் செய்யும்போது களைப்பு நீங்க தமக்கேயான நாட்டார் பாடல்களையம் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு பல்வேறு சுவாரஸ்யமான விடயங்களைத் தன்னகத்தே கொண்டு, இயற்கையை அழகிற்காகச் சூழக் கொண்ட பாரிய பிரதேசமே சம்மாந்துறைப் பிரதேசமாகும்.(musthafa.2014).

**பேறுபேறுகளும் கலந்துரையாடல்களும்**

சம்மாந்துறையானது பெரும்பான்மை முஸ்லிம்கள் கொண்ட ஓர் பிரதேசம் என்பதை நாம் ஏலவே கண்டோம். இருந்தபோதிலும் பல்வேறு தனிமனித, சமூகக் காரணங்களால் இங்கு தலாக் இடம்பெறுகின்றமை மிகவும் மனவருத்தத்திற்குரிய வியடம் ஒன்றாகும்.

கடந்த வருடம் (2015) காழி நீதிமன்றத்தில் தீர்த்து வைக்கப்பட்ட தலாக் வழக்குகளாக 570 காணப்படுகின்றது. 2015இல் காழி நீதிமன்றத்தில் மொத்தமாகப் பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் 12.56 மானவை தலாக் வழக்குகளாயும் அவற்றில் 12.05 வழக்குகளில் கணவனும், மனைவியும் பிரிந்து வாழ்வதாயும் அதாவது தலாக் பெற்றுள்ள வழக்குகளையும் 2016 ஜுன் வரையிலான மொத்த வழக்குகளில் 11.78 வழக்குகள் தலாக் வழக்குகளாகவும் அவற்றில் 11.53 தீர்த்து வைக்கப்பட்டள்ளதாயும் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன.

இன்னும் 2015இல் தலாக் உரிமை கோரியோர் 79 பேர் எனவும் 2016 செப்டம்பர் மாதம் வரை தலாக் உரிமை கோரியோர் 48 எனவும் வரைபுகள் காண்பிக்கின்றன.

ஆகவே, இவற்றின் மூலம் அதிக தலாக் இடம்பெறுவதுடன் சம்மாந்துறைப் பிரதேசத்தின் இன்றைய வளர்ச்சிக்கு இது (தலாக்) முட்டுக்கட்டையாகவும் அமைகின்றது என்பது தெளிவாகின்றது.

நாம் ஏலவே பார்த்த விடயங்களின் அடிப்படையில் தலாக்கினைக் குறைப்பதற்கான முன்மொழிவுகளைப் பற்றி யோசிப்பதன் அவசியத்தை உணர்ந்திருப்போம். அந்த வகையில் பின்வருவனவற்றைக் காண்போம்.

1. சட்டங்கள் மீள்திருத்தப்படல்

முதலாவது முன்மொழிவாகச் சட்டங்கள் மீள்திருத்தப்படல் என்பதைக் காணலாம். அதாவது காழி நீதிமன்றங்களில் பல்வேறு சட்டங்கள் நடைமுறையில் இருந்தாலும் இன்னும் சில விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட வேண்டிய தேவை உண்டு. அந்த வகையில முன்னால் காதி நீதிபதி, ஆ.ஆ. மஹ்ரூப் கரீம், விடிவெள்ளி (08.04.2016) என்பவரால் சில விடயங்கள் பரிந்துரை செய்யப்பட்டன.அவற்றில் கவனத்திற் கொள்ளப்படும் விடயங்களாக 15 அறியப்பட்டுள்ளது.(mahroof kareem,2016)

இவ்வாறு பரிந்துரைக்கப்பட்ட விடயங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டால் சில கடுமையான சட்டங்களுக்கு அஞ்சி ஆண்கள் மற்றும் பெண்கள் தலாக் செய்யும் விடயத்தில் சற்றுச் சிந்திக்க முற்படுவர். உதாரணமாகத் திருமண வயதெல்லையை 18ஆக வரையறுக்கும்போது தலாக்கின் காரணங்களில் ஒன்றான இளவயதுத் திருமணத்தை இல்லாமல் செய்யலாம். அதேவேளை இவ்விடயத்தில் சில மார்க்க ரீதியான முரண்பாடுகள் இருப்பதனையும் கருத்திற்கொள்ள வேண்டும். அதேபோல வெளிநாட்டிலிருந்து விவாகரத்துக் கோருவோருக்குச் சில சட்டங்களைக் கொண்டு வருவதன்மூலம் கணவன். மனைவி நீண்ட காலம் பிரிந்து வாழ்வதனால் ஏற்படும் தலாக்கின் வீதத்தைக் குறைக்கலாம். அடுத்து விவாகப் பதிவு ஊர் மாறி, இடம் மாறி மேற்கொள்வது தவிர்க்கப்படுவதன் ஊடாகவும் திருமணப் பேச்சுவார்த்தைக்கு முன்னமே மணமகள், மணமகன் பற்றிய தகவல்களைப் பெறுவதனூடாகவும் சரியான முறையில் தகவல் அறியாமல் திருமணம் செய்வதனூடாக ஏற்படும் தலாக்கினைக் குறைக்க முடியும்.
அதேவேளை இவர்களின் பரிந்துரையில் காணப்படும் அனைத்து விடயங்களும் நடைமுறைக்கு மிகப் பொருத்தமானது என்றும் கூறுவதற்கு இல்லை. உதாரணமாக அவ்வாறு பரிந்துரை செய்யப்பட்ட விடயங்களில் ஒன்றான பெண் காழி நீதிபதியாக அமர்த்தப்படல் எனும் விடயம் தொடர்பாக இன்னும் சில விடயங்கள் சிந்திக்கப்படல் வேண்டும். காரணம் இவ்வாறு காழியாக நியமிக்கப்பட்ட பெண் ஒரு கட்டத்தில் வலியாக இருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படலாம். அவ்வேளை பின்வரும் ஹதீஸின் அடிப்படையில் அது இயலாத காரியமாக மாறிவிடும். ‘‘எந்தவொரு பெண்ணும் மற்றைய பெண்ணுக்குத் திருமணம் செய்து வைக்கக் கூடாது.’’ (இப்னு மாஜா, தாரகுத்னி)

அதேவேளை ஒரு பெண்ணால் தனித்து நின்று நாம் ஏலவே பார்த்த சில சவால்களை முகங்கொடுக்க இயலாமல் போகும். இந்தக் காரணங்களால் தனித்து நின்று ஒரு பெண்ணைக் காழியாக நியமிக்கக் கூடாது. மாறாக அந்த காழி நீதிமன்றத்தில் பெண்களின் விடயங்களைப் பகிர்ந்து கொள்ளத் தகுதிவாய்ந்த, அனுபவம் வாய்ந்த ஒருவர் இருக்க வேண்டுமென்பதே ஏற்றுக் கொள்ள முடியுமான கருத்தாக அமைகிறது. இவை பற்றித் தீர்க்கமான தீர்மானங்கள் எடுக்கப்படுமிடத்துச் சிலவேளை தலாக் வீதம் குறைவதற்கு இது காரணமாக அமையும்.

இவை தொடர்பான அதாவது முஸ்லிம் குடும்பவியல் சட்டத்தோடு தொடர்பான விடயங்களைக் கவனிப்பதற்காக 1970களில் இருந்து தேசிய ரீதியாக 3 குழுக்கள் அமைக்கப்படுகின்றன. அவற்றின் மிக அண்மையில் அமைக்கப்பட்டது. மிலிந்த மொரகொட நீதி அமைச்சராக இருந்த காலத்தில் முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தைச் சீர்திருத்தம் செய்யும் நோக்குடன் 2009இல் உருவாக்கப் பட்ட முஸ்லிம் தனியார் சட்ட சீர்திருத்தக் குழுவாகும். 6 வருடங்களுக்கு மேலாகச் செயற்பட்டுவரும் 16 உறுப்பினர்களையும் கொண்ட இந்தக் குழு இன்னும் சில மாதங்களில் சீர்திருத்தத்திற்கான பரிந்துரைகளை அரசாங்கத்திடம் கையளிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இன்னும் இந்தச் சட்டங்களைச் சீர்திருத்தம் செய்வதற்கான பொறுப்பை அரசாங்கம் முஸ்லிம் சமூகத்தின் கைகளில் ஒப்படைத்து இருந்தாலும் இந்த விடயத்தில், சமூகத்திற்கு மத்தியில் கருத்தொற்றுமை இல்லை என்பது சமூக, சூழலை ஆராய்ந்து முடிவெடுப்பதில் தாமதம் ஏற்படக் காரணமாகும்.

## 2. **Premarriage Councelling**

சட்ட ரீதியாக மேற்சொன்ன விடயங்கள் கவனத்திற் கொள்ளப்பட்டாலும் திருமண வாழ்வு என்பது இரு தனிநபர்களின் உள்ளங்கள் இணைந்து வாழ்வது என்பதுவும் அவற்றின் திருப்தியே அதிகமாக நோக்கப்பட வேண்டும் என்பதுவும் யாமறிந்த உண்மையே. ஆகவே, திருமணத்திற்கு முன் அது பற்றிய அறிவு வழங்கப்படுவதுடன், பிரச்சினைகளை இனங்கண்டு தீர்ப்பதற்கான திறனும் வளர்க்கப்

பட வேண்டும். அந்த வகையில் திருமணத்தின் நோக்கம், தன்னுடைய வாழ்க்கைத் துணையை எவ்வாறு தேர்வு செய்வது என்பவற்றை அறிவதன்மூலமும் திருமண வாழ்வின் எல்லாச் சூழ்நிலைகளிலும் புரிந்துணர்வோடு, பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான சகலவிதமான வழிகாட்டல்களை வழங்குவதன் மூலமும் பிரச்சினைகள் வருவதற்கு முன்பே அவற்றைத் தவிர்க்க முடிவதோடு சந்தேகங்கள், ஐயங்கள் போலியான நம்பிக்கையுடன் வாழ்வை எதிர்கொள்வது தவிர்க்கப் படுவதுடன், மணவாழ்வுக்கு முன்பாகவே போதிய ஆயத்தங்களை மேற்கொண்டு மகிழ்வான வாழ்வை வாழ வழியமைத்துக் கொடுக்க முடியும்.(Rauf Zain.2014).

திருமணத்திற்கு முன் ஒரு தாயே பெண் பிள்ளையின் முன்மாதிரி. அதேபோன்று தந்தையே ஆண் பிள்ளையின் முன்மாதிரி. அந்த வகையில் ஒரு பெண் தன் தாயிடமிருந்தும் ஒரு ஆண் தன் தந்தையிடமிருந்து திருமணத்திற்கு முன்னரான குடும்ப வாழ்க்கை பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்கின்றனர். அந்த வகையில் பின்வரும் விடயங்கள் பெற்றோரால் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்கப்பட வேண்டிய தேவை உண்டு.

1. தமது நடத்தைகளால் கணவனுக்கும் மனைவிக்குமான முன்மாதிரியாக இருத்தல்.
2. குடும்ப வாழ்வைப் பற்றிய அடிப்படையான அம்சங்களைக் குமரிப் பருவத்தின் தொடக்கத்திலிருந்து பயிற்றுவித்தல்.

இன்னும் திருமணம் அல்லது குடும்ப வாழ்வு என்பது வெறுமனே ஆணுக்கும் பெண்ணுக்குமிடையிலான சட்ட ரீதியான ஒப்பந்தம் என்ற பொருள் கொண்டாலும் அது ஒரு உள ரீதியான ஒப்பந்தம், மனங்களின் இணைவு என்பதைப் புரிய வைப்பதுவும் குடும்ப வாழ்வின் நோக்கம். பொறுப்பு, கடமைகள், செயல்பாடுகள் என்பன குறித்து அறிவூட்டுவதும் இன்றியமையாதது. குறிப்பாக இவ்விடத்தில் திருமணத்தின் நுட்பம், கணவன் மனைவி தெரிவு அவர்களின் கடமைகள் பற்றி அறிவூட்டப்படுவதுடன், பயிற்றுவிக்கப்படவும் வேண்டும்.

அந்தவகையில் பின்வரும் விடயங்கள் கீழ்வரும் தலைப்புக்களில் பேசப்படுவது சிறப்பாக அமையும்.

1. திருமணத்தின் நோக்கம் பற்றி விழிப்புணர்வூட்டல்
2. கணவன், மனைவி தெரிவு பற்றிய அறிவு
3. கடமைகள், பொறுப்புக்கள் பற்றித் தெளிவூட்டல்.(salah.2014).

எனவே, திருமணத்திற்கு முன் இவ்வாறான வழிகாட்டல்களை புதிதாக வாழ்க்கையை ஆரம்பிக்க இருக்கும் தம்பதியினருக்கு வழங்குவதன்மூலம் திருமண வாழ்வின் உயரிய நோக்கத்தை உணர வைத்து, அந்த வாழ்க்கைக்கு அவர்களைத் தயார்படுத்தி யதார்த்தங்களை முன்னமே உணர வைக்க முடியும். இதனூடாகவும் பிற்காலங்களில் தலாக் நிகழும் விகிதாசாரத்தைக் குறைக்கலாம்.

3. சிறந்த குடும்பம் தொடர்பான விழிப்புணர்வுகளை வழங்கல்

எவ்வாறு தான் திருமணத்திற்கு முன்னர் பல்வேறு வழிகாட்டல்கள் வழங்கப்பட்ட போதிலும் குடும்ப வாழ்வை வாழும்போது ஏற்படும் பிரச்சினைகளை வேறு விதமாகவே தீர்க்க வேண்டியுள்ளது. அந்தவகையில் மூன்றாவது முன்மொழிவாகச் சிறந்த குடும்பம் தொடர்பான விழிப்புணர்வுகளை வழங்குவதனைக் கூறலாம்.

1. குடும்பமும் தம்பதியினரும்
2. குடும்பத்தின் அடிப்படைகள்
3. சமூக ரீதியாக தலாக்கினை எவ்வாறு தீர்க்கலாம்?

எனவே, இவை பற்றி கலந்துரையாடுவதும் இவ்வாறு குடும்ப விவகாரங்கள் சம்பந்தமான ஆய்வுகள், வழிகாட்டல்கள், கருத்தரங்குகளுக்கென்று தனியானதொரு பிரிவு இயங்குவதும் நாம் வாழும் காலகட்டத்தில் மிகவும் அவசியமானது. ஏனென்றால் குடும்பங்களின் சீரழிவானது முழு இஸ்லாமிய சமூகத்தின் வீழ்ச்சிக்கும் காரணமாக அமைந்து விடும். எனவே, மேற்சொன்ன விடயங்களைப் பிரதேச வாரியாக நடைமுறைப்படுத்தி அறிவூட்டுவதன் மூலம் குடும்பங்களிடையே தோன்றும் தலாக் வீதத்தினைக் குறைக்கலாம்.

4. பலதார மணம்

நாம் தற்போது காணவிருப்பது தலாக் நிகழ்வதற்கான காரணிகளைக் குறைப்பதற்கான மற்றொரு முன்மொழிவாகும். இங்கு சொல்லவரும் விடயம் பலரால் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாக இருப்பினும் கூட இது சரியான முறையில், ஒழுங்குபடுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்போது சில சாதகமான வெளியீடுகளைத் தரும் என்பது தெளிவு.(razik.2015)

பலதாரமணத்தில் எந்த இடத்திலும் பெண்கள் காயப்படுத்தப்படவும் இல்லை, அவர்களின் உரிமை இழக்கப்படவும் இல்லை என்பதை அனைவரும் புரிந்து கொள்ள முடியும்.

**ஆய்வு முடிவுகளும் பரிந்துரைகளும்**

மேற்படி ஆய்வின் சுருக்கத்தைச் சற்று நோக்கினால், இந்தத் தலாக்கினைக் குறைப்பதற்கான முன்மொழிவுகள் பேசப்பட்டுள்ளன. அந்தவகையில் பல காணப்பட்டாலும் குறிப்பாக 4 முன்மொழிவுகள் தலாக் இடம்பெறுவதற்கான காரணங்களுடன் ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது. அதில் சட்டங்கள் மீள்திருத்தப்படல் எனும் விடயத்தில் சில முன்மொழிவுகள் கூறப்பட்டு அவை ஒப்பிடப்பட்டுள்ளது. என்றாலும் இன்றைய காலகட்டத்தில் அவை விமர்சிக்கப்படுகின்ற ஒன்றாக அமைந்திருப்பதையும் நாம் கருத்திற்கொள்ள வேண்டும். ஏனென்றால் மேற்குலகச் சக்திகள் தற்போது தனியார் சட்டத்தில் மாற்றங்கள் ஏற்பட வேண்டும், சட்டங்கள் மீள்திருத்தப்பட வேண்டும் என்ற கோஷங்களை எழுப்புவதைக் காணலாம். இவை எதிர்காலங்களில் பல பாதகமான, குர்ஆன் சுன்னாவுக்கு மாற்றமாக அமையும் என்பதாகவும் கூறப்படுகின்றது. நவம்பர் மாதம் வரை இதற்கான சரியான தீர்வுகள், இந்தப் பரிந்துரையின் மாற்றீடுகள் வெளிவராமை கவலைக்குரிய விடயமாகும். துறைசார் நிபுணர்கள், புத்திஜீவிகள் மற்றும் இஸ்லாமிய அறிஞர்களின் ஆலோசனைப்படி மேற்கூறப்பட்ட பரிந்துரைகள் மீள்திருத்தப்பட வேண்டுமென்பதாயும் சில மாற்றங்களை எச்சரிக்கையுடனேயே மேற்கொள்ள வேண்டுமென்பதாயும் உலமா சபை தெரிவிக்கின்றது. ஆகவே, இவை பற்றிச் சரியான தெளிவு வெகு விரைவில் கிடைக்கும் என்பதாக எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்னும் மற்றுமொரு முன்மொழிவான பலதார மணம் சாத்தியப்படுவது ஒவ்வொரு தனிநபரைப் பொறுத்தே அமைகிறது. அதாவது, அதற்கான காரணங்களும் தீர்வுகளும் நியாயப்படுத்தப்பட்ட போதிலும் அதனை நடைமுறைப் படுத்துவது கடினம் என்ற மனோநிலை சமூகத்தில் காணப்படுவதானது இவற்றைச் செய்வதில் சிக்கல்களை ஏற்படுத்துகின்றது.

இன்னும் என்னுடைய ஆய்வின்போது நான் நேர்காணல்கள் மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டது. அதன்போது அதிகமானோர் தமது பிரச்சினைகளைக் கூறி, வெளிப்படையான சில காரணிகளைத் தலாக்கிற்கான காரணமாகக் கூறிய போதிலும் கூட அதிகமானோர் உள ரீதியான பாதிப்புக்கு ஆளாகியமையைக் காணக் கூடியதாயிருந்தது. அந்த வகையில் உளவள ஆலோசனையாளர் ஒருவர்

இவ்வாறான பிரச்சினைகளுக்கு ஆலோசனை வழங்கும் முகமாகக் காழி நீதிமன்றங்களில் அமர்த்தப்படுதலும் கூட இன்று இன்றியமையாத ஒன்றாக அமையும்.

இன்னும் முன்மொழியவாகக் கூறப்பட்ட சில விடயங்களைத் தனிமனித, சமூக ரீதியாகச் செயற்படுத்தி அவற்றைக் குறிப்பிட்ட காலத்திற்குள் அவதானிக்க வேண்டும். அவற்றின் சாத்தியப்பாடுகள் எவ்வாறு, விளைவுகள் எவ்வாறு அமைகின்றன என்பதை விளங்கிக் கொள்வதுடன், பயனளிக்காத போது வேறு சில விடயங்கள் பற்றிச் சிந்திக்கவும் முடியும். என்றாலும், இதனை நடைமுறைப்படுத்துவதில் சமூகத்தின் அனைத்து மட்டத்தினரதும் உதவிகள் தேவை என்பதையும் அனைவரும் புரிந்து கொள்வது அவசியமாகும்

## BIBILIOGRAPHY


1. அல்குர்ஆன்
2. இஸ்மாயில், மு. (2012). ஸஹிஹுல் புகரி, 1ஆம் பதிப்பு.சென்னை.ரஹ்மத் பப்ளிகேஷன்.
3. முஸ்லிம், அ. (2006). ஸஹீஹுல் முஸ்லிம், 2ஆம் பதிப்பு.சென்னை. ரஹ்மத் பப்ளிகேஷன்.
4. கொடிக்கார, சூ. (2009). இலங்கையின் முஸ்லிம் குடும்பச் சட்டம். MWRAF / WLUML, 2010.
5. மன்சூர்.(2012).முஸ்லிம் தனியார் சட்டம் – 01 (திருமணம்).இலங்கை. WAMY.
6. உரிமைகளையும் வெளிகளையும் கோரும் பெண்கள்.முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி"2014.
7. விவாகரத்து.முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி "2002.
8. ஸாபிக், ஸை. (2015). பிக்ஹுஸ் ஸுன்னா (நூஹ் மஹ்ழரி – மொழிபெயர்ப்பாளர்). சென்னை. இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட்.
9. அலி, ஸியாகத்.இனிமை பொங்கும் இல்லறம்.சென்னை.யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ்.
10. ஸெயின், ர. (2014). குடும்ப வாழ்வின் உளவியல், 4ஆம் பதிப்பு. திஹாரிய.Center for Development Studies.
11. மன்சூர். (2013). குடும்பம் என்ற நிறுவனமும் பெண் வகிக்கும் பாத்திரமும். விஜிதபுர. தாருல் ஹிக்மா வெளியீட்டகம்.
12. சம்மாந்துறையின் குடிகள்.குடிகள் பற்றிய ஓர் ஆய்வு.
13. நஜாத், அ. சம்மாந்துறை முதல் அஸர்பைஜான் வரை.
14. விடிவெள்ளி
15. அல்ஹஸனாத்
16. இஸ்லாமிய சிந்தனை, நளீமிய்யா இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகம்.
17. மீள் பார்வை.
18. மைதீன், மு. (2004). திருமணச் சட்டங்கள்.மதுரை. மாலிக் பப்ளிகேஷன்ஸ்.
19. இஹ்சான். (2008). நபி வழியில் திருமணம். இலங்கை. AJ Printers.
20. ஜுல்பிகார். (1997). தலாக் சொல்லாதீர்கள், 6ஆம் பதிப்பு.சென்னை. ஹாஜியார் புக் டிப்போ.
21. அப்துல் லதீப். (2009). விவாகம் ஷரீஅத் சட்ட விளக்கம். அக்கரைப்பற்று. ஜின்னா பப்ளிகேஷன்ஸ்.
22. ஹஸன்.(2007). அன்றாட வாழ்வில் உளவியல், 1ஆம் பதிப்பு. கொழும்பு. அல்ஹஸனாத் வெளியீட்டகம்.

23. பெரோஸ்கான், ஆ. (2012). மணக்கும் மணவாழ்வு, 2ஆம் பதிப்பு. சென்னை. மக்கள் சேவை பதிப்பகம்.
24. முஸ்தபா, (2014). சரித்திரம் கூறும் சம்மாந்துறை, 1ஆம் பதிப்பு. சம்மாந்துறை. கலாபிவிருத்திக் கழகம்.
25. அஸ்கலானி, ஹ.(2012). பலூகுல் மராம் (அப்துல் காதிரி உமரி – மொழிபெயர்ப்பாளர்), 4ஆம் பதிப்பு. சென்னை. Islamic Studies Publication Center.
26. ஸெயின், ர.முஸ்லிம் இளைஞர்களின் நடத்தைப் பிறழ்வுகள். கொழும்பு. WAMY.
27. திருமறை அல்குர்ஆனின் இறுதி மூன்று ஜுஸ்களுக்கான விளக்கம;.ift வெளியீடு.
28. மௌதூதி, அ. (2003).திருக்குர்ஆன், 7ஆம் பதிப்பு. சென்னை.Islamic Foundation Trust.
29. அலி, மு.முன்மாதிரி முஸ்லிம் பெண்மணி. தாருல் ஹுதா.
30. அக்ரம்.(2001). நடைமுறைக்கேற்ற இஸ்லாம், 2ஆம் பதிப்பு. கொழும்பு. ஹிஸ்புல் இஸ்லாம் ட்ரஸ்ட்.
31. ஸலாஹ், லொ.(2014). ஆண் பெண் வேறுபாடுகள் (மன்சூர் - மொழிபெயர்ப்பாளர்), இலங்கை.அல்குர்ஆன் கற்கைகள் திறந்த கல்லூரி.
32. Majeed.(2004).Gift to bride. New Delhi. Adam Publishers & Distributors.